தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை,
தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)
*தொலைபேசி எண் 24357580.*

**வழக்கு எண். 15371 / விசாரணை / 2009**

**விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.**

**முன்னிலை :** திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,
மாநில தகவல் ஆணையர்

**மனுதாரர் :** திருமதி. தீ. கொளஞ்சியம்மாள்,
த/பெ. (லேட்) ச. கந்தசாமி பத்தர்,
நெ. 77, சேலம் ரோடு,
விருத்தாசலம்,
கடலூர் மாவட்டம்.

**பொது அதிகார அமைப்பு :** பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்.

---------

மனுதாரர் திருமதி. தீ. கொளஞ்சியம்மாள் தமது 24.09.09 தேதியிட்ட கடிதத்தில் அவரது சகோதரர் திரு. கே. இராசவேல் என்பவரை விசாரணைக்கு அனுமதித்து அனுப்பியதன் அடிப்படையில் இன்றைய விசாரணைக்கு திரு. கே. இராசவேல் வந்திருந்தார். திரு. என். பார்த்தசாரதி, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், திருக்கோவிலூர் இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 08.05.09 அன்று 3 இனங்களில் தகவல் கேட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் மனு செய்துள்ளார். தகவல் கிடைக்காததால் 13.06.09 அன்று மேல்முறையீடு செய்துள்ளார். இவ்வாணையத்திற்கு 07.07.09 அன்று மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையில் மனுதாரர் சார்பாக வந்திருந்தவர் ஒரு குறிப்பிட்ட நபரின் நிலுவைத் தொகை பெறப்படவில்லை என்று தெரிவித்தார். மனுதாரர் சார்பாக வந்திருந்தவரிடம்

தகவல் கேட்கப்பட்டது குறித்து விசாரிக்கப்பட்டது. மனுதாரர் 08.05.09 தேதிய மனுவில் 3 இனங்களில் தகவல் கேட்டுள்ளதாக தெரிகிறது. 3 இனங்களுக்கும் உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டது குறித்து மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தும், குறிப்பிட்டு 3 இனங்களுக்கும் தகவல் தரப்படாதது குறித்து விசாரிக்கப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் இவ்வாணையத்திற்கு 15.09.09 அன்று அனுப்பி கடிதத்தை விசாரணையின் போது காண்பித்தார். மனுதாரருக்கு தகவல் தராமல் மனுதாரர் கேட்டுள்ள தகவல்களுக்கான முழு விவரங்களும் இவ்வாணையத்திற்கு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது உறுதி செய்யப்பட்டது. மனுதாரருக்கு விசாரணையின் போது நேரிடையாக இவ்வாணையத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் நகல் வழங்கப்பட்டது. மனுதாரர் கேட்டுள்ளபடி பட்டுவாடா செய்யாததற்கான காாணம், தொகை வழங்காததற்கான விவரம், காலதாமதம் செய்ததற்கான காரணம் ஆகியவை இவ்வாணையத்திற்கு அனுப்பப்பட்ட கடிதத்தில் தகவலாக இருப்பது தெரிய வருகிறது. மனுதாரருக்கு இவ்வாணையத்திற்கு அனுப்பப்பட்ட கடிதம் விசாரணையின் போது நேரிடையாக வழங்கப்பட்டு முழுத் தகவலும் வழங்கப்பட்டதாக முடிவு செய்து இவ்வழக்கு இத்துடன் முடிவு செய்யப்படுகிறது.

ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09
ஆணையத்தின் ஆணைப்படி

தமிழ்நாடு தகவல் ஆணையம்

( சு. மோகன தாஸ் )
உதவி பதிவாளர்

<u>வழக்கு எண். 15371/09</u>

பெறுநர்
பொதுத் தகவல் அலுவலர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருக்கோவிலூர்,
விழுப்புரம் மாவட்டம்.

திருமதி. கொளஞ்சியம்மாள்,
த/பெ. (லேட்) ச. கந்தசாமி பத்தர்,
நெ. 77, சேலம் ரோடு,
விருத்தாசலம்,
கடலூர் மாவட்டம்.